5 - 113

சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து கூடுதல் தண்ணீர் வரியை (Additional Water Cess) நீக்கம் செய்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 546

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.
படிக்கவும்

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் கூடுதல் தண்ணீர் வரியை (Additional water Cess) நீக்குதல் குறித்து பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:–

நன்செய் நிலங்களுக்கு பிற அனைத்து வரிகள் உட்பட சமச்சீராக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5/–வீதம் (ரூபாய் ஐந்து) வசூலிக்கப்படவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ள நிலையில், கூடுதல் தண்ணீர் வரியினை வசூலிப்பதை நிறுத்தலாம்; இது தொடர்பாக பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கங்களுக்கும், நீர்வள ஆதார அமைப்பிற்கும் உரிய இழப்பீட்டுத் தொகை அரசால் வழங்கப்படலாம்.

3. குழுவின் இப்பரிந்துரையை அரசு கவனமாக ஆய்வு செய்தது. தண்ணீர் பகிர்மானத்தை பராமரிக்கும் தண்ணீர் உபயோகிப்பாளர் சங்கத்திற்கும் (Water Users Associations), நீர்வள ஆதார அமைப்பிற்கும் (Water Resources Organisation) வழங்குவதற்காக கூடுதல் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படுகிறது. நன்செய் பயிர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தர ஆதாரங்களில் இருந்து செய்யப்படும் பாசனத்திற்கு, தற்போது ஒரு எக்டேருக்கு ரூ.175/– வீதம் கூடுதல் தண்ணீர் வரி வசூலிக்கப்படுகிறது. புன்செய் பயிர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தர ஆதாரங்களில் இருந்து செய்யப்படும் பாசனத்திற்கு ஒரு எக்டேருக்கு ரூ.150/– வீதம் கூடுதல் தண்ணீர் வரி வசூலிக்கப்படுகிறது.

த.பி.பா.

Verified by PeopleStore TM

4.நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் இப்பரிந்துரையினை அரசு ஏற்றுக்கொண்டு தற்போது விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கூடுதல் தண்ணீர் வரியை (Additional Water Cess) நீக்கம் செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

5. இந்த நடைமுறையை 1420ம் பசலி ஆண்டு (2010 –11) முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.
நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக் உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Verified by RealEstate TM